


✠ புனிதர் எலிசபெத் ✠
*(St. Elizabeth)*

நன்னெறியாளர் - *(Righteous)*

பிறப்பு : கி. மு. முதலாம் நூற்றாண்டு — எபிரோன் (ஜோஷுவா *21:11)*
*(Hebron)*

இறப்பு : கி. மு. முதலாம் நூற்றாண்டு — அநேகமாக எபிரோன்
*(Probably Hebron)*

ஏற்கும் சமயம் :
ரோமன் கத்தோலிக்க திருச்சபை *(Roman Catholic Church)*
கீழ் ஆர்த்தோடாக்ஸ் திருச்சபை
*(Eastern Orthodox Church)*
ஓரியண்ட்டல் ஆர்த்தோடாக்ஸ் திருச்சபை
*(Oriental Orthodox Church)*
ஆங்கிலிக்கன் திருச்சபை
*(Anglican Church)*
லூதரன் திருச்சபை
*(Lutheran Church)*

*அனைத்து இஸ்லாம்*
*(All Islam)*

**நினைவுத் திருநாள் : நவம்பர் 5**

**பாதுகாவல் : கர்ப்பிணிப் பெண்கள்**

**புனிதர் எலிசபெத், லூக்கா நற்செய்திகளின்படி "செக்கரியாவின்" (Zechariah) மனைவியும், *"திருமுழுக்கு யோவானின்" (John the Baptist)* தாயாரும் ஆவார்.**

திருவிவிலிய சரிதம் :

லூக்கா நற்செய்திகளின்படி, எலிசபெத் "ஆரோனின்" (Aaron) மகளாவார். இவரும் இவரது கணவரான செக்கரியாவும் இறைவனின் பார்வையில் நன்னெறியாளர்களாய் வாழ்ந்தனர். ஆனால், குழந்தைகளில்லாதவர்களாய் வாழ்ந்தனர். செக்கரியா ஆலய பணிகளில் இருந்தபோது "இறைதூதர் காபிரியல்" (Angel Gabriel) அவர்முன்னே தோன்றி கூறியதாவது :'**"செக்கரியாவே பயப்படாதே; உமது இறைவேண்டல்கள் கேட்கப்பட்டன; உமது மனைவி கருத்தாங்கி, ஒரு ஆண் மகவை ஈன்றெடுப்பாள்; நீர் அதற்கு யோவான் என்று பெயரிடுவீர்; அவன் உங்களுக்கு ஒரு சந்தோஷமும், மகிழ்ச்சியுமாய் இருப்பான்; அவர் இறைவனின் பார்வையில் பெரியவனாய் இருப்பதால் அநேகர் அவரது பிறப்பால் மகிழ்ச்சியில் திளைப்பார்கள்; அவர் திராட்சை இரசமும் வேறு பானங்களையும் அருந்தார். அவர் பிறப்பின் முன்பே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவார்.** ~ **லூக்கா 1:13–15**

தாமும், தமது மனைவி எலிசபெத்தும் முதிர் வயதினர் என்ற காரணத்தால் செக்கரியா, இறைதூதர் காபிரியேலின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவில்லை. இதையறிந்த காபிரியேல் தூதர், செக்கரியாவை நோக்கி, **"உமது விசுவாசமின்மையால் நீர் வாய் பேச இயலாத ஊமையாவீர்; எமது வாக்கு நிறைவேறும்வரை நீர் ஊமையாக இருப்பீர்" என்று இயம்பி மறைந்தார்.**
**~ லூக்கா 1:16-23**

மற்றும், **லூக்கா நற்செய்திகள் *(1:24–25), (1:26-40), (1:41–45), (1:46-55), (1:56–64), (1:65-80)*** ஆகியவற்றில் எலிசபெத் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

அதிகாரபூர்வமற்ற திருமறை ஏடுகள் *(Apocrypha) :*

எலிசபெத் மேலும் பல அதிகாரப்பூர்வமற்ற திருமறை ஏடுகளிலும் குறிப்பிடப்படுகிறார்.

இஸ்லாம் மத திருமறை நூலாகிய ***"திருக்குர்ஆனிலும்"*** இவர் கௌரவிக்கப்படுகிறார்.